## 67. உம்மை ஏற்று கொண்டது எத்தனை பாக்கியம்

பல்லவி

என்னை தெரிந்து கொண்டது எத்தனை பாக்கியம்
உம்மை ஏற்றுக் கொண்டது எத்தனை சிலாக்கியம்

அனுபல்லவி

*ஜீவனுள்ள தேவனை நான் அறிந்திட்டேன்*
*ஜீவ வார்த்தையை நன்கு புரிந்திட்டேன்*

சரணங்கள்

1. சிறந்தவர்கள் பலர் உண்டு பூமியிலே
அற்பமான எங்களை தெரிந்து கொண்டீர்
- ஜீவனுள்ள

2. ஞானிகள் பலர் உண்டு பூமியிலே
பைத்தியமான எங்களை தெரிந்து கொண்டீர்
- ஜீவனுள்ள

3. பெலவான்கள் பலர் உண்டு பூமியிலே
பெலவீனமான எங்களை தெரிந்து கொண்டீர்
- ஜீவனுள்ள

4. உள்ளவர்கள் பலர் உண்டு பூமியிலே
இல்லாதவர்களை தெரிந்து கொண்டீர்
- ஜீவனுள்ள